தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

# நாகப்பட்டினம் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(30.09.2023 முதல் 04.10.2023)

அறிக்கைஎண்: 78/2023 தேதி : 29.09.2023

## நாகப்பட்டினம் மாவட்டத்தின் கடந்தவாரவானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 32 - 37 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 24 - 27 °செ ஆகவும் பதிவானது. மேலும் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

## நாகப்பட்டினம் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (30.09.2023 முதல் 04.10.2023).

| கடந்தவாரவானிலை (26.09.2023 முதல் 28.09.2023) | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு (30.09.2023 முதல் 04.10.2023) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 26/09 | நாள்-2 27/09 | நாள்-3 28/09 | தேதி | நாள்-1 30/09 | நாள்-2 01/10 | நாள்-3 02/10 | நாள்-4 03/10 | நாள்-5 04/10 |
| 5.3 | 0 | 0 | மழை (மி.மீ.) | 2 | 2 | 2 | 6 | 7 |
| 33 | 32 | 37 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 36 | 36 | 36 | 35 | 35 |
| 24 | 27 | 25 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 25 | 24 | 24 | 23 | 23 |
| 7 | 6 | 7 | மேகமூட்டம் (ஆக்டா) | 7 | 8 | 7 | 8 | 8 |
| 92-81 | 76-67 | 75-67 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70-50 | 70-50 | 70-60 | 70-50 | 80-50 |
| 5 | 8 | 5 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 22 | 22 | 20 | 20 | 22 |
| தென் தென் கிழக்கு | வடக்கு | மேற்கு | காற்றின் திசை | தென் தென் மேற்கு | தென் தென் மேற்கு | தென் தென் மேற்கு | தென் தென் மேற்கு | தென் தென் மேற்கு |

## நாகப்பட்டினம் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். 30.09.2023 முதல் 04.10.2023 ஆகிய தினங்களில் லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 35 – 36 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23 - 25 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 70 - 80 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 50 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 20 - 22 கி.மீ. என்ற அளவுக்கு பெரும்பாலும் தென் தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| பொது | | உழவர் பெருமக்கள் அனைவரும் தமிழ் நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் பரிந்துரைக்கப்பட்ட வேளாண் சார்ந்த செயலிகளை பதிவிறக்கம் செய்து பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளபடுகிறது (TNAU AAS, Meghdoot and DAMINI). |
| நெல் | நாற்றாங்கால் | விதைத்த நாற்றாங்காலில் விதைகள் மழை நீரினால் சிதறுவதை தடுக்க, வைக்கோலை நாற்றாங்காலில் பரப்பிவிடவும் |
| நெல் | நடவு வயல் | மழைகாலம் நூற்புழு தாக்குதலுக்கு உகந்தது என்பதால், தாளடி நடவிற்கு முன் ஏக்கருக்கு 100 கிலோ வேப்பம்புண்ணாக்கு இட்டு பூச்சி மற்றும் நூற்புழுக்களை கட்டுப்படுத்தலாம். |
| வாழை | | உகந்த வானிலையை கருத்தில் கொண்டு வாழைக்கு பரிந்துரைக்கப்பட்ட உரங்களை இடவும். |
| கால்நடைகள் | மாடு | மழைக்காலமாக இருக்கும் காரணத்தினால் நீரில் நனைந்த அல்லது மூழ்கிய தானியங்களை/ புண்ணாக்கை கால்நடைகளுக்கு தருவதை தவிர்க்க வேண்டும். |

## குறுஞ்செய்தி

விதைத்த நாற்றாங்காலில் விதைகள் மழை நீரினால் சிதறுவதை தடுக்க, வைக்கோலை நாற்றாங்காலில் பரப்பிவிடவும்

**இயக்குநர்**